# கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 'திராவிட மாடல்' அரசு செய்த சாதனைகளைப் பட்டியலிட்ட கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை கேட்க ஓசூரில் திரண்டிருந்த மக்கள் திரள்!



## பா.ஜ.க. ஒரு அழிவு சக்தி; சங்கிப் படை நுழைந்தால் சர்வநாசம்தான்

# தி.மு.க. அரசு இருப்பதால் மட்டுமே தமிழ்நாடு காப்பாற்றப்படுகிறது!

### ஓசூர் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!



ஓசூர், ஏப்.21-

"பா.ஜ.க. என்பது ஒரு அழிவு சக்தி! அதை உள்ளே நுழைய விட்டால் நம்முடைய மாநிலமும் இருக்காது; மாநிலக் கட்சிகளும் இருக்காது! சங்கிப்படை உள்ளே நுழைந்தால் சர்வ நாசம்தான்" என்று - கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19-04-2026) மாலை, கிருஷ்ணகிரி மாவட்டம் - ஓசூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்துவிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு, தமிழ்நாட்டின் உரிமைகளைத் தி.மு.க.வால் மட்டும்தான் காப்பாற்ற முடியும் என்று நிரூபித்துவிட்டு, உங்கள் முன்னால் கெத்தாக நின்று கொண்டிருக்கிறேன். இப்போது சொல்லுங்கள், திராவிட மாடல் 2.0வுக்கு நீங்கள் ரெடியா? ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் 'OK' சொல்லிவிட்டார்கள். கிருஷ்ணகிரி ரெடியா? நன்றி.

**ராகுல் காந்தியின் வலிமையான உரை!**

காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர் மரியாதைக்குரிய மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் வந்திருக்கிறார். நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி இந்த அளவிற்கு வலிமையாகத் தொடர அடித்தளமாக இருக்கும் மூத்த தலைவர்! அதேபோன்று, நேற்று அன்பிற்கினிய சகோதரர் ராகுல் காந்தி அவர்களும், தமிழ்நாடு வந்து பிரச்சாரம் செய்துவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் பிரச்சாரம் செய்யும்போது ஒன்றை குறிப்பிட்டுச் சொன்னார். "இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை மோடி அவர்களால் 'கண்ட்ரோல்' பண்ணவே முடியாது. அதனால்தான் அடிமை அ.தி.மு.க. ஆட்சியைத் தமிழ்நாட்டில் நிறுவ வேண்டும் என்று பார்க்கிறார்" என வலிமையாகப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்.

**மல்லிகார்ஜுன கார்கேவுக்கு நன்றி!**

நான் கோவையில் பரப்புரைக்குச் சென்றபோது, நம்முடைய சகோதரர் ராகுல் அவர்கள், திருவள்ளூர் மற்றும் டெல்டாவிற்கு வந்திருக்கிறார். நான் நாளைக்குச் சென்னையில் பிரச்சாரம் செய்யும்போது, அவர் தென்கோடியில் குமரியில் பிரச்சாரத்தில் இருப்பார். சுற்றிச் சுற்றி நானும், என் சகோதரர் ராகுல் காந்தி அவர்களும் அனைத்துத் திசைகளிலும் நம்முடைய கூட்டணியின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டு வருகிறோம். அதற்கு மேலும் வலிமை சேர்க்க வந்திருக்கும் மரியாதைக்குரிய கார்கே அவர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பிலும் முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

### அவர் தனி மனிதர் அல்ல; அவர் பின்னால், நாடே இருக்கிறது

## மு.க.ஸ்டாலின் ஒரு சமூக நீதிப் போராளி! - 'நம்பர் ஒன்' முதலமைச்சர்!

### அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே புகழாரம்!

ஓசூர், ஏப்.21-

**தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு சமூக நீதிப் போராளி என்றும், நாட்டிலேயே நெம்பர் ஒன் முதலமைச்சராக திகழ்கிறார் என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.**

ஒசூரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம் மேற்கொண்டார். இதில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தேர்தல் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் பேசியதாவது:-

தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு சமூக நீதி போராளியாக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். நலிவுற்ற மக்களை உயர்த்துவதற்காக அல்லும் பகலும் உழைத்து வருகிறார்.

இன்றைக்கு இந்தியாவிலேயே நெம்பர் ஒன் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார். அவர் ஒரு தனி மனிதர் அல்ல. இன்றைக்கு சொல்லப் போனால், இந்த நாடே அவருக்குப் பின்னால் இருந்து அவருக்கு ஆதரவாக இருக்கிறது.




பல மாதங்களாக மௌனமாக இருந்துவிட்டு தற்போது அரசியல் உள்நோக்கத்துடன் மகளிர் இடஒதுக்கீட்டை நிறைவேற்ற நாடகமாடுகிறது பாஜக. பெண்களுக்கு எதிரானது பாஜக அரசு என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள்.

மோடியை வீழ்த்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றியால் மட்டுமே முடியும். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினரின் வாக்குகளால் மட்டுமே தொகுதி மறுவரையறை மசோதாவை தடுக்க முடிந்தது.

2023-ஆம் ஆண்டே மகளிர் ஒட ஒதுக்கீடு மசோதாவை கொண்டுவந்து விட்டோம். ஆனால், அதனை காலம் தாழ்த்தி நிறைவேற்றத் துடிப்பது ஏன்? மனு ஸ்மிருதியை பாதுகாப்பதே பாஜகவின் கொள்கை. பாஜக ஆளும் பல மாநிலங்களில் பெண்கள் வன்முறைக்குள்ளாகிறார்கள். ஆனால், அவற்றை ஒருநாளும் மோடி கண்டித்ததில்லை. நாட்டின் எந்தவொரு பிரச்சினைகள் குறித்தும் பேசாதவர் பிரதமர் மோடி.

மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருநாளும் செவிசாய்த்ததில்லை. பணமதிப்பிழப்பு கொண்டுவந்தார். அதனை ஏழைகளுக்காக செய்தாரா?

கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை ராகுல் காந்தி நடைப்பயணம் மேற்கொண்டு மக்கள் பிரச்சினைகளை அறிந்தார். மோடி அதுபோன்று ஏதாவது செய்துள்ளாரா? ஆட்சி அதிகாரம் ஒன்றே பிரதமரின் குறிக்கோள். மக்கள் தொகையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம்.

தமிழ்நாடு, கர்நாடகம், தெலங்கானா, கேரளம் போன்ற மாநிலங்கள் மக்கள் தொகையை கட்டுப்படுத்தின. அதற்கு தொகுதி மறுவரையறை மூலம் தண்டனை கொடுக்கப்படுகிறது.

இத்தகைய ஆட்சிக்கு எதிராக இளைஞர்கள், பெண்கள் என பலரும் இணைந்து காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட ஒரே சிந்தனை உடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது உரையில் தெரிவித்தார்.



**அழிவு சக்தியிடமிருந்தும், அடிவருடும் அரை மனிதரிடமிருந்தும், தமிழ்நாடு காப்பாற்றப்படுவது கழக அரசு இருப்பதால்தான்;**

**பிற்போக்கு நச்சுகளைத் தடுக்கும் பெரிய ராணுவம் ஸ்டாலின்; அவர் தொடரட்டும், அன்னைத் தமிழ்நாடு வெல்லட்டும்!**